chances of promotion without getting the services of such persons from the State Electricity Board; and

(b) if so, the action taken thereon?

<u>மதுரை மாநகராட்சி மின்சாரத் துறையில் பணிபுரிகின்ற</u>
<u>பட்டயத் தகுதி பெற்றவர்கள்.</u>

<u>திரு. பி. ஆர். தாமஸ்</u> : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) மதுரை மாநகராட்சி மின்சாரத் துறையில் பணிபுரிகின்ற பட்டயத் தகுதி பெற்றவர்கள் (L.E.E. அல்லது D.E.E படித்தவர்கள்) மாநில மின்சார வாரியத்திலிருந்து தங்களைப்போல் உள்ள பட்டயத் தகுதி பெற்றவர்களின் பணிகளைப் பெறுமலேயே, பதவி உயர்வுகளுக்கான வாய்ப்புகளைத் தங்களுக்கே அளிக்குமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : (அ) ஆம்.

(இ) மதுரை மாநகராட்சி ஊழியர்களுக்கு தகுதி, நியமன முறை போன்ற விதிகள் இன்னும் நிர்ணயிக்கவில்லை. இந்த விதிகள் போட்ட பிறகுதான் மதுரை நகராட்சி ஆணையர் உத்தியோக உயர்வு கொடுக்கலாமா என்பதை கவனிப்பார்.

Thekkamalai—Kovilpatti Arulmigu Ayyanar Temple in Manapparai Taluk

* 28. Q.—THIRU Y. VENKATAESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the extent of the land belonging to the Thekkamalai-Kovilpatti Arulmigu Ayyanar Temple in Manapparai Taluk, Tiruchirappalli District;

(b) whether the idols in the temple have been damaged by fire; and

(c) if so, the action taken thereon by the Government?

1975 அக்டோபர் 27]

மணப்பாறை தாலுக்கா, தேக்கமலை கோவில்பட்டி அருள்மிகு அய்யனார் கோவில்.

திரு. ஏ. வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை தாலுக்கா, தேக்க மலை-கோவில்பட்டி அருள்மிகு அய்யனார் கோவிலுக்கு சொந்தமான நிலத்தின் பரப்பளவு எவ்வளவு?

(இ) அக்கோவிலில் உள்ள சிலைகள் தீயினால் பாதிக்கப்பட்டுள்ள னவா?

(உ) ஆமெனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை மேற் கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) திருக்கோயிலுக்கு சொந்த மாக 36.58 ஏக்கர் நிலம் உள்ளது. இவை சர்வீஸ் மானிய நிலங்கள் என்று மேற்படி திருக்கோயில் பண்டாரங்களால் வழக்கு தொடரப் பட்டுள்ளது.

(இ) ஒன்பது சிலைகள் தீயினால் வெடித்து உடைந்துவிட்டன.

(உ) திருக்கோயில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. புதிய சிலைகள் செய்யப்பட்டுள்ளன, 25-6-1975 அன்று குடமுழுக்கு விழா நடைபெற் றுள்ளது. அரசு இதற்காக மானியம் வழங்கியுள்ளது.

திரு. ஏ. வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இந்தக் கோவிலுக்குள்ள சர்வீஸ் மானியமான, கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை சர்க்கார் எடுத்துக் கொள்ள ஏதாவது நடவடிக்கை எடுத்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தற்போது அந்தக் கோவிலுக்குச் சொந்தமாக நஞ்சை நிலம் 1.12 ஏக்கரும், புஞ்சை நிலம் 35.45 ஏக்கரும் உள்ளது. கோயில் பூஜை செய்யக் கூடிய முறைப் பண்டாரங்கள் 6 பேர்கள் அந்த நிலங்களை அனுபவித்துக் கொண்டு கோவிலுக்கு நடத்த வேண்டிய பூஜைகளைச் செய்து வருகிறார்கள். சர்வீஸ் மானிய நிலங்கள் குறித்து, குளித்தலை முனிசிபல் கோர்ட்டிலே வழக்கு தொடர்ந்தார்கள். வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பேரில் திருச்சி மாவட்ட நீதிபதி நீதி மன்றத்தில் வழக்குப் போட்டு கோயில் நிலத்தை எடுத்துக் கொள்வதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கின்றார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: சர்வீஸ் மானிய நிலத்தை அவர்கள் அனுபவித்து வந்தார்கள். சர்வீஸ் செய்தற்கு மானியத்தை அனுபவிப்பதற்கு அனுமதிப்பது என்று இருக்கிறது. அதை எடுத்துக்

கொள்வதால் அரசுக்கு என்ன லாபம்? அதை எடுத்துக் கொள்வது தேவைதானா? அதனால் என்ன ஆதாயம்? எந்த அடிப்படைக் காரணத்திற்காக வழக்கு ஏற்பட்டிருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: வழக்குப் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் கோயில் நிலத்திற்கு, கோயில் சொத்துக்கு பங்கம் ஏற்படாத வகையில், அரசு அந்த முடிவு எடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: சர்வீஸ் மானியம் என்றால் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கோவிலில் இருக்கின்ற ஊழியர்கள் கோவிலில் பணிபுரிந்துகொண்டு, அந்தச்சொத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதற்கு சர்வீஸ் மானியம் என்று பெயர்.

திரு. கெ. வி. ராஜகோபால்: கோவிலின் சொத்தை அனுபவித்துக் கொண்டு, அந்தக் கோவலின வேலைகளைச் செய்துகொண்டிருப்பதால், அது சர்வீஸ் மானியம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அது போன்று கோவில் சொத்தில், கோவில் நிலங்களில் சில முக்கியஸ்தர்கள் பயிரிட்டு, அதில் வருவதைக் கோவிலுக்குக் கொடுக்காமலேயே எடுத்துக் கொள்கிறார்களே, அவர்களுக்கு என்ன பெயர் வைத்திருக்கின்றார்கள்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கோவில் பெருச்சாளிகள் என் பெயர்.

Raja Chatram Endowment in Thanjavur

* 29. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that the income from the properties at Manamerkudi in Thanjavur District has not been utilised for the Raja Chatram Endowment in Thanjavur; and

(b) if so, the action taken thereon by the Government?

தஞ்சாவூர் ராசா சத்திரத்தின் அறக்கட்டளை.

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தஞ்சாவூர் ராசா சத்திரத்தின் அறக்கட்டளைக்கு அம்மாவட்டத்தில் உள்ள மணமேற்குடியில் உள்ள சொத்துக்களின் வருவாய் பயன்படுத்தப் பெறவில்லை என்பது உண்மையா?